03.04.2024

O.S.No.154/2012

பி.வா.சா. 1.திரு.சஞ்ஜித் த.பெ.மகாராஜன்

சாட்சி இன்று அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்

குறுக்கு விசாரணை தொடர்ச்சி

1. பி.வா.சா.ஆ-2 ஆவணமான எங்களுக்கு எழுதிக் கொடுத்ததாக சொல்லப்படும் கிரைய ரசிதுக்கு எதிராக சின்னகருப்பன் செயல்பட்டதாக சொல்வதால் அவருக்கு எதிராக நாங்கள் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் எங்களிடம் பேச்சுவார்த்தை நடத்தி கொண்டு கிரையம் செய்து கொடுப்பதாக கடைசி வரை சொல்லிக் கொண்டிருந்ததால், நான் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. எங்களுக்கு தெரியாமல் மேற்படி சின்னகருப்பன் தனது சொத்தை வாதிக்கு விற்பனை செய்து விட்டார். இந்த வழக்கு தாக்கல் செய்த பின்பு வாதிக்கு, சின்னகருப்பன் கிரையம் செய்து கொடுத்த விவரத்தினை தெரிந்துகொண்ட பின்பு மேற்படி சின்னகருப்பனுக்கு எதிராக நாங்கள் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரிதான், ஆனால் அதை சின்னகருப்பனிடம் கேட்கும் போது வாதிதான் அந்த விவகாரத்தில் தலையிடுகிறார். தாவா சொத்தான 1 ஏக்கர் 82 செண்டு நிலம் எங்களுடைய அனுபவத்தில் உழவடை பாத்தியமாக இருந்து வந்தது என்பதனை காண்பிப்பதற்கு எந்த வித வருவாய் ஆவணங்களும் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரிதான். எங்களுக்கு கிரையம் செய்து கொடுப்பதாக சொல்லி ரசிது எழுதி கொடுத்துவிட்டு எங்களை ஏமாற்றி விட்டு வாதிக்கு சொத்தினை விற்பனை செய்துள்ளதால் எங்களிடம் உழவடை பாத்தியதை காண்பிப்பதற்கு எந்தவித ஆவணமும் இல்லை.

2. தாவா சொத்தில் வாதியோ, வாதிக்கு கிரையம் கொடுத்த கிரையதாரர்களோ அனுபவத்தில் இருந்து வரவில்லை என்று நான் கூறியிருப்பதால், அதை நிரூபிக்கும் பொருட்டு எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ-1 ஆவணத்தில் 1 முதல் 12 நபர்கள் அதில் கண்டுள்ள சொத்துக்களை எவ்வித வில்லங்கத்திற்கும் உட்படுத்தாமல் இருந்து வந்ததாக காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான், அது அவர்களுடைய பத்திரம், அதில் அவ்வாறு காட்டப்பட்டுள்ளது. வா.சா.ஆ-14 பவர் பத்திரத்தில் எங்களது மேற்படி 1 வது நபருக்கு கிடைத்த சொத்தினை எங்கள் கைவசம் வைத்து எங்களது 1ம் நபர் பெயரால் எஸ்.நெடுங்குளம் கிராமத்தில் 33 நிர் கூட்டுப்பட்டா ஏற்பட்டு சர்வசுதந்திர பாத்தியத்துடன் நிராயுதபாணியாய், தனித்த சுவாதீனத்தில் வைத்து ஆண்டு அனுபவித்து வருதவாக கண்டுள்ளது என்றால் சரிதான், ஆனால் அதற்கும் எனக்கும் சம்பந்தம் இல்லை, அந்த ஆவணத்தினை பற்றி எனக்கு தெரியாது.

3.என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ-16 கிரைய ஆவணத்தில் 3ம் பக்கத்தில் சின்னகருப்பன் அதில் கண்டுள்ள சொத்தினை கூட்டு பட்டாவாக ஏற்பட்டு தனித்த சுவாதீனத்தில் வைத்து ஆண்டு அனுபவித்து வருவதாக கண்டுள்ளது என்றால் சரிதான், ஆனால் அது தவறனா சங்கதியாகும். அதே ஆவணத்தில் அதில் கண்டுள்ள சொத்தின் சுவாதீனத்தை இந்த வாதியிடம் அந்த கிரைய தேதியன்றே முழுமையாக ஒப்படைத்து விட்டதாக காணப்படுகிறது என்றால் சரிதான், ஆனால் தாவா சொத்தின் சுவாதீனம் எங்களிடம் தான் உள்ளது. தாவா சொத்து சம்பந்தமாக சின்னகருப்பனுக்கோ,

அவரது வகையறாவிற்கோ நாங்கள் எவ்வளவு குத்தகை என்ன வகையான குத்தைகை கொடுத்தோம் என்று எங்களது நிருபண வாக்குமூலத்திலோ, எதிர் வழக்குரையிலோ சொல்லவில்லை என்றால் எங்களுக்கு கிரைய ரசிதாக எழுதி கொடுத்துள்ளதால் நாங்கள் குத்தகை எதுவும் கொடுக்கவில்லை. தாவா சொத்தில் நாங்களோ, எங்களது முன்னோரோ உழவடைதாராக ஒருபோதும் இருந்ததில்லை என்றாலும், ஆகையால்தான் நாங்கள் உழடை எதுவும் கொடுக்கவில்லை என்றாலும், தாவாசொத்து ஒருபோதும் எங்கள் வசத்திலோ அல்லது எங்கள் முன்னோர்களின் வசத்திலோ அனுபவத்தில் இருந்தடிதல்லை என்றால் சரியல்ல.

4. எனது எதிர்வழக்குரை மற்றும் நிருபண வாக்குமூலத்தில் கண்டுள்ள சங்கதிகளை நிருபிக்கும் வகையில் நான் எந்த ஆவணமும் தாக்கல்செய்யவில்லை என்றால் சரியல்ல, 1984 ல் எங்களுக்கு கிரைய ரசிது எழுதிக்கொடுத்துள்ளதால் அப்போதிலிருந்து எக்ஙளதுசொந்த நிலம் போல் தாவா சொத்தில் அனுபவத்தில் தற்போது வரை இருந்து வருகிறோம். அந்த கிரைய ரசிதினை நாங்கள் தாக்கல் செய்துள்ளோம். பி.வா.சா.ஆ-2 கிரைய ரசிது ஏற்பட்ட விவரம் எனக்கு நேரிடையாக தெரியாது என்றால் சரிதான், எனக்கு விவரம் தெரிந்த பின்பு எனது தந்தை சொல்லி அந்த விவரம் தெரியும். சின்னகருப்பன் தற்போது வரை உயிருடன் உள்ளார் என்றால் சரிதான். அவரை விசாரித்தால் இந்த வழக்கு முழு விவரமும் தெரிய வரும் என்றால் விசாரிக்கலாம். தாவா சொத்தினை வாதி சின்னகருப்பனிடம் இருந்து கிரையம் பெற்று, கிஸ்தி செலுத்தி தரிசாக வைத்து அனுபவம் செய்து வருகிறார் எ ன்றால் சரியல்ல, தற்போது வரை வாதி தாவா சொத்திற்கு வந்ததே கிடையாது. வாதி தாவா சொத்திற்கு வந்ததில்லை என்று நான், இந்த வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கின்றேன் என்றால் சரியல்ல.

5. கடந்த 24.07.2012 அன்று 1ம் பிரதிவாதியும் 17.12.2012 அன்று 2 முதல் 4 பிரதிவாதியும் 13.04.2013 அன்று பிரதிவாதிகள் அனைவரும் சேர்ந்து வாதியை தாவா சொத்தில் அனுபவம் செய்யவிடாமல் மிரட்டி உள்ளோம் என்றால் சரியல்ல. நாங்கள் சின்னகருப்பனுக்கு கொடுத்த பணத்தினை அவர்கள் எங்களுக்கு திருப்பி கொடுக்கவில்லை, அவர் அந்த பணத்தினை திருப்பி கொடுக்க வேண்டும் அல்லது வயலை எங்களுக்கு திருப்பி கொடுக்க வேண்டும், நாங்கள் யாரையும் மிரட்டவில்லை. சின்னகருப்பன் வகையறாவிற்கு பாத்தியப்பட்ட சர்வே எண்.8/3ல் கட்டுப்பட்ட 4 ஏக்கர் 15 செண்டுநிலத்தினையும் அவர்கள் விற்பனை செய்துள்ளார்கள் என்றால் சரிதான், அந்த சொத்தில் சின்னகருப்பனுக்கு பாத்தியப்பட்ட எங்கள் வசம் உள்ள 1 ஏக்கர் 80 செண்டு மட்டும் தான் அதையும் எங்களுக்கு தெரியாமல் அவர் வாதிக்கு விற்பனை செய்துவிட்டார். அவ்வாறு மேற்படி 4 ஏக்கர 15செண்டுநிலத்தினை கிரையம் பெற்ற ஒவ்வொரு நபரும் அந்தந்த சொத்துக்களை அவரவர்கள் சுவாதீனத்தில் வைத்து அனுபவம் செய்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. வாதி தாவா சொத்தினை தனது தனித்த சுவாதீனத்தில் வைத்து அனுபவம் செய்து வருகிறார் என்றாலும், நாங்கள் ஒருபோதும் தாவாசொத்தில் அனுபவத்தில் இருந்ததில்லை என்றாலும் சரியல்ல. வாதி கிரயம் பெற்றது முதல் தாவா சொத்திற்கு வந்ததே கிடையாது, அவரது அனுபவமும் இல்லை. தாவா சொத்தினை எவ்வாறு அனுபவிக்க வேண்டும் என்பது அந்த சொத்தின் உரிமையாளரின் விருப்பத்தினை பொறுத்து என்பதால் வாதி தாவாசொத்திற்கு வரவே இல்லை என்று நான் சாட்சியம் அளிப்பது ஏற்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. வாதிகோரியபடி தாவா பரிகாரம் வாதிக்கு கிடைக்கதக்கது என்றால் சரியல்ல.